Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், அக்டோபர் 29, 2026 | இதழ் 199

## சீனாவில் நடந்த உலகத்திறன் போட்டிகளில் பங்கேற்ற 12 தமிழக போட்டியாளர்களுக்கு ரூ.49 லட்சம் ஊக்கத்தொகை: முதல்வர் விஜய் வழங்கினார்

சென்னை, 29 அக்டோபர் 2026: சீனாவில் நடந்த உலகத்திறன் போட்டிகளில் தமிழ்நாடு சார்பில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் வென்ற முகமது சலாமுக்கு ரூ.15 லட்சம் ஊக்கத்தொகை, சிறப்புத் தகுதிப் பதக்கங்களை வென்ற ராகுல், அர்ஜுன், சுரேந்திரன், ஜாய் தாஸ் ஆகிய 4 பேருக்கு தலா ரூ.5 லட்சம் ஊக்கத் தொகை, போட்டிகளில் பங்கேற்ற சுரேஷ் குமார், கோகுல கண்ணன், முகமது மபாஜ், அஸ்வின், ரோஹித், தனுஸ்ரீ மகேஷ், மோகன்ராஜ் ஆகிய 7 பேருக்கு தலா ரூ.2 லட்சம் ஊக்கத் தொகை என மொத்தம் 12 போட்டியாளர்களுக்கு ரூ.49 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இதற்கான காசோலைகளை சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் விஜய் நேற்று வழங்கி பாராட்டினார். உலகத் திறன் போட்டிகளில் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஓட்டல் மேனேஜ்மெண்ட், மருத்துவம் மற்றும் துணை மருத்துவப் படிப்புகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் பணிபுரியும் இளைஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கலாம்.



இதில் பங்கேற்பதற்கு, முதலில் தமிழ்நாடு மாநில அளவில் பல்வேறு நிலைகளில் நடைபெறும் தமிழ்நாடு திறன் போட்டிகளில் வெற்றி பெற்று, பின்னர் தென் மண்டல அளவிலான திறன் போட்டிகளிலும் வெற்றி பெற்று, தேசிய அளவிலான திறன் போட்டிகளிலும் வெற்றி பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் கல்லூரிகளின் முதல்வர்கள் தங்களது மாணவ, மாணவியர்களிடையே இத்திறன் போட்டிகள் குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்தி, மாணவ, மாணவியர்கள் பெருமளவில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டுமென முதல்வர் வேண்டுகோள் விடுத்தார்.

உலகத் திறன் போட்டிகள் குறித்த விவரங்களை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் உதவி எண்கள் 9962220527 மற்றும் 9962220528 ஆகியவற்றை தொடர்பு கொண்டும், www.skilldevelopment.tn.gov.in/tnskills/ என்ற இணையதளம் மூலமாகவும் அறியலாம்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் சாய்குமார், சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் மதுமதி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவின் கடல்சார், சரக்குப் போக்குவரத்து துறைக்கு பெரும் உத்வேகம் - பிரதமர் மோடி

சென்னை 29, அக்டோபர் 2026: கிராமப்புற நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை முன்னெடுக்கவும் ரூ.7,395 கோடி மதிப்பிலான பிரதமரின் வளர்ச்சி அடைந்த கிராம தன்னாட்சித் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உலகத்தரம் வாய்ந்த விளையாட்டுப் பொருட்கள் உற்பத்திச் சூழலை உருவாக்கும் நோக்கில், கேலோ இந்தியா விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்திற்கும், உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் ரூ.10,000 கோடி மதிப்பீட்டில் கண்டெய்னர் தயாரிப்புத் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் கடல்சார் மற்றும் சரக்குப் போக்குவரத்துத் துறைக்கு ஒரு பெரும் உத்வேகம்; கண்டெய்னர் உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதிய மற்றும் ஏற்கனவே உள்ள உற்பத்தியாளர்களுக்கு நிதி உதவி;

உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த, தரச் சான்றிதழ் பெற்ற கண்டெய்னர்கள்; இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும். அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கேலோ இந்தியா விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தித் திட்டம் ஒரு திருப்புமுனையாக அமையும்.



முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஆதரவு அளிப்பது; ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் திறன் மேம்பாடு, தரத்தின் மீது கவனம், அதிக வேலைவாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

மேக் இன் இந்தியா, ஆத்மநிர்பர் பாரத் மற்றும் இந்தியாவின் உலகளாவிய விளையாட்டு லட்சியங்களுக்கு ஒரு பெரும் முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## தேனி சிறையிலிருந்து தப்பிய மதுரை சகோதரர்கள் சரண்: சிறையில் இருந்து தப்பிய 17 கைதிகளும் கைது

சென்னை 29, அக்டோபர் 2026: தேனி மாவட்டச் சிறையிலிருந்து தப்பிய 17 கைதிகளில், மீதமிருந்த 2 பேரும் கூடலூர் காவல் நிலையத்தில் சரணடைந்தனர்.

அமைச்சியாப்புரம் மலைப்பகுதியில் பதுங்கிய கைதிகளை ட்ரோன் மூலம் கண்காணித்த போலீசார் மேலும் 2 பேரை பிடித்தனர். நேற்று வரை 13 பேர் பிடிக்கப்பட்ட நிலையில், மேலும் 2 பேரை போலீசார் கைது செய்தனர். தப்பிய 17 கைதிகளில் முதலில் 4 பேர் பிடிபட்டனர். பின்பு நேற்று 9 பேர் பிடிபட்ட நிலையில் தற்போது மேலும் 2 பேர் சிக்கியுள்ளனர்.

தப்பிய கைதிகள் அருகில் உள்ள மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் பதுங்கிய நிலையில் அவர்களைப் பிடிக்க 17-க்கும் மேற்பட்ட தனிப்படைகள் அமைக்கப்பட்டு, ட்ரோன்கள் உதவியுடன் தீவிரத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. நேற்றைய தினம் 13 கைதிகள் பிடிபட்ட நிலையில், இன்று மேலும் 2 பேர் சிக்கியுள்ளனர்.



தற்போது பிடிபட்டுள்ளவர்கள் மதுரையைச் சேர்ந்த பொன். முத்துச்செல்வன் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ரெஜின் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 15 கைதிகள் பிடிக்கப்பட்டனர். இந்த நிலையில் மீதமிருந்த 2 பேரும் கூடலூர் காவல் நிலையத்தில் சரணடைந்தனர்.

மதுரையைச் சேர்ந்த சகோதரர்களான திருப்பதி மற்றும் மீனாட்சி சுந்தரம் ஆகியோர் காவல் நிலையத்தில் சரணடைந்ததைத் தொடர்ந்து, சிறை யிலிருந்து தப்பிய 17 கைதிகளும் பிடிபட்டுள்ளனர்.

## ஆசிய பாரா விளையாட்டு போட்டி பதக்கம் வென்ற தமிழக வீரர்களுக்கு ஆளுநர் பாராட்டு

சென்னை 29, அக்டோபர் 2026: ஜப்பானில் நடந்த 5வது ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்ற தமிழக வீரர்களை பாராட்டும் நிகழ்ச்சி, சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நேற்று நடந்தது. இதில், ஆளுநர் அர்லேகர், அவரது மனைவி அனகா அர்லேகர் வீரர், வீராங்கனைகளை பாராட்டினர். ஆண்கள் நீளம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்ற சோலைராஜ், மகளிர் பளுதூக்குதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற கஸ்தூரி ராஜாமணி, பாரா டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற பேபி சஹானா ரவி ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பாரா டேபிள் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் மற்றும்



இரட்டையர் பிரிவுகளில் வெண்கலப் பதக்கங்கள் வென்ற மதன், மகளிர் ஒற்றையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் வெண்கலப் பதக்கங்கள் வென்ற மணிஷா ராமதாஸ், மகளிர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கமும், கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்ற நித்யா ஸ்ரீ சுமதி சிவன், மகளிர் ஒற்றையர் பிரிவில் தங்கப் பதக்கமும், கலப்பு இரட்டையர் மற்றும் மகளிர் இரட்டையர் பிரிவுகளில் வெள்ளிப் பதக்கங்களும் வென்று மொத்தம் 3 பதக்கங்களைப் பெற்ற துளசிமதி முருகேசன், கலப்பு இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற சிவராஜன் சோலைமலை, ஆடவர் ஒற்றையர் பிரிவில் தங்கப் பதக்கமும் இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்ற நவீன் சிவகுமார் ஆகியோரும் பாராட்டப்பட்டனர். மேலும், போட்டியில் பங்கேற்ற ருதிக் ரகுபதி, சுதர்சன் முத்துசாமி சரவண குமார், சாந்தியா விஸ்வநாதன், ஹரிஸ் மைதிலி ஸ்ரீகுமார் ஆகியோருக்கும் ஆளுநர் பாராட்டுத் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் தங்களது இலக்குகளை நம்பிக்கையுடனும் உறுதியுடனும் அடைய இந்த சாதனைகள் ஊக்கமளிக்கும் என்றார். வீரர்கள் தொடர்ந்து பல சாதனைகளைப் படைக்கவும் வாழ்த்துத் தெரிவித்தார்.




## வளர்ச்சியடைந்த இந்தியா பில்டத்தான் 2025-ன் வெற்றியாளர்களைக் கௌரவித்தார், மத்திய அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி

சென்னை 29, அக்டோபர் 2026: புதுதில்லியில் இன்று நடைபெற்ற வளர்ச்சியடைந்த இந்தியா பில்டத்தான் 2025 நிகழ்வில், மத்திய கல்வித் துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி, தேசிய அளவில் வெற்றி பெற்ற 10 குழுக்களையும் புத்தாக்கச் சிந்தனையாளர்களையும் கௌரவித்தார். 'மிகப்பெரிய புத்தாக்கத் தீர்வுப் போட்டி' என்பதற்கான கின்னஸ் உலக சாதனைச் சான்றிதழும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, யு.எல்.எல்.ஏ.எஸ்-நவ பாரத் சாக்ஷர்தா காரியக்ரம் திட்டத்தின் கீழ், ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கான வழிகாட்டுதல்களை அமைச்சர் வெளியிட்டார். மேலும், மின்னணுக் கழிவுகள் குறித்த வினாடி-வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு ஜெயந்த் சௌத்ரி, குழந்தைகளை எதிர்காலத் தலைவர்களாக உருவாக்குவதற்கு, அவர்களிடையே தன்னம்பிக்கை, படைப்பாற்றல், புதுமை, சுயசிந்தனையை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தினார். மின்னணுக் கழிவுகள் தொடர்பான சவால் அதிகரித்து வருவதை சுட்டிக் காட்டிய அமைச்சர், இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதில் பள்ளி மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது, நிறுவனங்கள், சமூகங்கள், குடிமக்களின் கூட்டுப் பொறுப்பு என்றும் அவர் கூறினார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

வியாழன்,
அக்டோபர் 29, 2026

## எம்ஜி விண்ட்சர் இன்டல்ஜ் எடிஷன் ரூ. 17,99,800 (எக்ஸ்-ஷோரூம்) விலையில் அறிமுகம். பிசினஸ்-கிளாஸ் வசதிகளுடன் கூடிய ஒரு புதிய சொகுசான அனுபவம்

சென்னை 29, அக்டோபர் 2026: ஜேஎஸ்டபிள்யு எம்ஜி மோட்டார் இந்தியா நிறுவனம், இந்தியாவின் நம்பர் 1 எலெக்ட்ரிக் வாகனமான* எம்ஜி விண்ட்சரின் மேலும் பல சொகுசு வசதிகள் கொண்ட 'எம்ஜி விண்ட்சர் இன்டல்ஜ் எடிஷனை' இன்று அறிமுகப்படுத்தியுள்ளது. 38-கேடபிள்யு ஹெச் பேட்டரி பேக் மூலம் இயங்கும் இந்த வாகனம், 100 கேடபிள்யு (136 பிஎஸ்) பவர் மற்றும் 200 என்எம் டார்க் திறனை வெளிப்படுத்துவதோடு, சான்றளிக்கப்பட்ட 332 கி.மீ# பயண தூர திறனையும் வழங்குகிறது.

எம்ஜி விண்ட்சரின் எதிர்காலத்திற்கு ஏற்ற வடிவமைப்பு, விசாலமான உட்புறம் மற்றும் அதன் பிரத்யேக பிசினஸ்-கிளாஸ் வசதிகளுடன், இந்த இன்டல்ஜ் எடிஷன் ஒரு புதிய பிரத்யேக அனுபவத்தை வழங்குகிறது. இந்த ஸ்பெஷல் எடிஷனில், நேர்த்தியான ஷேடோ கோல்டு நிறத்துடன், கருப்பு நிற மேற்கூரையும் இணைந்து ஒரு தனித்துவமான டியூயல்-டோன் தோற்றத்தில் மிளிர்கிறது. கருப்பு நிற ஓஆர்விஎம்-கள், ஆர்-18 பிளாக் அலாய் சக்கரங்கள் மற்றும் சி-பில்லரில் உள்ள பிரத்யேக 'INDULGE' பேட்ஜிங் ஆகியவை இதன் பிரீமியம் தோற்றத்தை மேலும் சிறப்பாக்கி, இந்த வாகனத்திற்கு ஒரு கம்பீரமான, தனித்துவமான அடையாளத்தை அளிக்கின்றன.



இதன் உட்புற கேபின், பிரத்யேக அர்பன் டான் மற்றும் கருப்பு நிறத்திலான அப்ஹோல்ஸ்டரி உடன் பிரீமியம் அனுபவத்தையும், மென்மையான மற்றும் நேர்த்தியான உணர்வையும் தருகிறது. முன்பக்க ஹெட்ரெஸ்ட்களில் உள்ள பிரத்யேக 'INDULGE' எம்பிராய்டரி தனித்துவமான அடையாளத்தை வெளிப்படுத்துகிறது.

பிசினஸ்-கிளாஸ் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் விதமாக, இரண்டாவது வரிசைப் பயணிகளுக்குக் கூடுதல் வசதியையும் பொழுதுபோக்கையும் வழங்கும் 'பிரைவ் ஸ்கிரீன்' இதில் ஸ்டாண்டர்டு அம்சமாக வழங்கப்பட்டுள்ளது. இத்துடன், INDULGE தீம் கொண்ட குஷன்கள் மற்றும் கழுத்து தலையணைகள் கூடுதல் சௌகரியத்தையும் பிரத்யேக உணர்வையும் சேர்க்கின்றன.

ஸ்டைல் மற்றும் சௌகரியத்தில் மேலும் தனித்துவத்தை விரும்பும் வாடிக்கையாளர்களுக்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரத்யேக ஆக்சஸரிகளும் கிடைக்கின்றன.

இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் விருப்பங் களுக்கு ஏற்ப விண்ட்சர் இன்டல்ஜ் எடிஷனை தனித்துவமாக மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

## கொல்கத்தா துறைமுகத்தில் ரூ.13.5 கோடி மதிப்பிலான 55 ஆயிரம் ஈ சிகரெட்டுகள் பறிமுதல்

சென்னை 29, அக்டோபர் 2026: கொல்கத்தா ஷியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்தில் சட்ட விரோதமாக கடத்திக் கொண்டுவரப்பட்ட 55 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈ சிகரெட்டுகளை வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

நேபாளத்தில் இருந்து வந்த கப்பலில் இரண்டு பெட்டகங்களின் மீது சந்தேகமடைந்த வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் அதனை சோதனையிட்டனர். அப்போது ஒரு பெட்டகத்தில் 40 ஆயிரம் ஈ சிகரெட்டுகளும், மற்றொரு பெட்டகத்தில் 15 ஆயிரம் ஈ சிகரெட்டுகளும் இருப்பதை கண்டறிந்த அதிகாரிகள் அதனை பறிமுதல் செய்தனர்.



அவற்றின் மொத்த மதிப்பு ரூ.13.5 கோடியாகும். 2026 - 27-ம் ஆண்டு நிதியாண்டில் மகாராஷ்டிரா, குஜராத், தில்லி, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் ரூ.120 கோடி மதிப்பிலான சுமார் 3 லட்சம் ஈ சிகரெட்டுகள் வருவாய் புலனாய்வு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## பாரத் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சிமாநாடு மற்றும் கண்காட்சியை பிரதமர் தொடங்கி வைக்கிறார்

சென்னை 29, அக்டோபர் 2026: பாரத் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சிமாநாடு மற்றும் கண்காட்சியை, நவம்பர் 2-ம் தேதி அன்று பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், பாரத் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சிமாநாடு மற்றும் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

2026, 2 முதல் 5 நவம்பர் 2026 வரை மூன்று நாட்களுக்கு இந்த மாநாடு நடைபெறவுள்ளது

இந்த உச்சி மாநாட்டில், 130-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில், பல்வேறு நாடுகளின் தலைவர்கள், முதலீட்டாளர்கள், தொழில்துறை, புதுமைக் கண்டுபிடிப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

ஆஸ்திரேலியா, டென்மார்க், ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, நார்வே, ஸ்வீடன், பிரிட்டன் ஆகியவை இந்தியாவின் நட்பு நாடுகளாகப் பங்கேற்கின்றன.



ஆந்திரப் பிரதேசம், அசாம், பீகார், சத்தீஸ்கர், தில்லி, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் உள்ளிட்ட பதின்மூன்று மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்று, தங்களின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல், முதலீட்டு வாய்ப்புகள், உற்பத்தித் திறன்களை வெளிப் படுத்தும்.

## அரிசி விலையை கட்டுப்படுத்த தமிழகத்தில் ஆந்திர நெல் விற்பனைக்கு அனுமதி: அமைச்சர்கள் தகவல்

சென்னை 29, அக்டோபர் 2026: தமிழகத்தில் அரிசி விலையை கட்டுப் படுத்த, தமிழகத்தில் ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்படும் நெல் மூட்டைகள் விற்பனைக்கு அனுமதிக்கப்படும் என்று திருத்தணி அருகே பொன்பாடி சோதனைசாவடியில் இன்று காலை ஆய்வு பணியின் போது அமைச்சர்கள் கே.ஏ. செங்கோட்டையன், வெங்கட்ரமணன் ஆகியோர் தெரிவித்தனர்.

திருத்தணி அருகே சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில், தமிழக-ஆந்திர எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பொன்பாடி சோதனை சாவடியில் இன்று காலை அமைச்சர்கள் கே.ஏ.செங்கோட்டையன், வெங்கட்ரமணன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.



இந்த ஆய்வில், சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் ஆந்திர எல்லையில் இருந்து தமிழகத்துக்கு வரும் வாகனங்கள் மற்றும் கனரக சரக்கு வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்து, அது தொடர்பான பல்வேறு விவரங்களை சோதனை சாவடி அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

இதைத் தொடர்ந்து, தமிழகத்தில் அரிசி விலையை கட்டுப் படுத்த, ஆந்திராவில் இருந்து நெல் மூட்டைகளை கொண்டு வந்து தமிழகத்தில் விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் என்று அமைச்சர்கள் செங் கோட்டையன், வெங் கட்ரமணன் ஆகியோர் தெரிவித்தனர். முன்னதாக, திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் உள்ள அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங் களில் ஆந்திர நெல் மூட்டை விற்பனைக்கு தமிழக அரசு தடை விதித்திருந்தது.

இதனால், ஆந்திராவில் இருந்து தமிழகத்துக்கு வரும் நெல் மூட்டைகள் முழுமையாக தடுக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து, சென்னை உள்பட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த சில நாட்களாக அரிசி விலை கிடுகிடுவென உயர்ந்து கொண்டே செல்கிறது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா-லிக்டென்ஸ்டைன் இடையே பொருளாதாரம், முதலீடுகளுக்கான வாய்ப்புகள்

சென்னை 29, அக்டோபர் 2026: அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள லிக்டென்ஸ்டைன் இளவரசர் திரு அலோயிஸ், மத்திய வர்த்தகம், தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயலுடன் பேச்சு நடத்தினார்.

புதுதில்லியில் 2026 அக்டோபர் 28, அன்று நடைபெற்ற இந்தச் பேச்சுவார்த்தையின் போது, இந்திய-ஐரோப்பிய தடையற்ற வர்த்தக சங்கத்தின் வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ், இரு நாடுகளிடையேயான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது, முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்தியாவின் வலுவான பொருளாதார நிலை, தொடர்ச்சியான சீர்திருத்த நடவடிக்கைகள், அதிகரித்து வரும் உற்பத்தித் திறன் ஆகியவை சர்வதேச முதலீட்டாளர்களுக்குப் பெரும் வாய்ப்பை வழங்குகிறது என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

வணிகம் செய்வதை எளிதாக்கு தல், ஒழுங்குமுறை நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், டிஜிட்டல் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், கணிக்கக்கூடிய, வெளிப்படையான, போட்டித்தன்மை



கொண்ட வணிகச் சூழலை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளை அவர் சுட்டிக் காட்டினார்.

முதலீடுகளுக்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்து வருவதன் காரணமாக, அதன் பொருளாதார வாய்ப்புகள் மீது உலக நாடுகளின் நம்பிக்கை அதிகரித்து வருகிறது. 2014-15 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகளில், திரட்டப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 843 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

இதில், 2025-26-ம் நிதியாண்டில் மட்டும் 94.53 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

## அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் நகரில் 14-வது சர்வதேச சுற்றுலா சந்தை

சென்னை 29, அக்டோபர் 2026: மத்திய சுற்றுலா அமைச்சகம், அருணாச்சலப் பிரதேச மாநில அரசுடன் இணைந்து நடத்தும் 14-வது சர்வதேச சுற்றுலா சந்தை அம்மாநிலத்தின் தவாங் நகரில் 2026 அக்டோபர் 29 முதல் 31 வரை நடைபெறவுள்ளது. வடகிழக்குப் பிராந்தியத்தின் தனித்துவமான சுற்றுலா வாய்ப்புகளை வெளிக்கொணரவும், வணிக நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையிலும் இச்சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழாவில் மத்திய சுற்றுலா, கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், சுற்றுலாத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி, அருணாச்சலப் பிரதேச முதலமைச்சர் திரு பெமா காண்டு ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கண்காட்சியில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட 22 நாடுகளைச் சேர்ந்த 43 சர்வதேச வர்த்தகப் பிரதிநிதிகள் உட்பட 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்கவுள்ளனர். வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா தலங்கள், பாரம்பரியக் கலைகள், கைவினைப் பொருட்கள் ஆகியவை இதில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

13 ஆண்டுகளுக்குப் பிறகு அருணாச்சலப் பிரதேசத்தில் மீண்டும் நடைபெறும் இந்நிகழ்வு, வடகிழக்குப் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# எனது ஆதரவால் தோல்வியில் இருந்து இஸ்ரேல் பிரதமர் தப்பினார் - அதிபர் ட்ரம்ப் தம்பட்டம்



சென்னை 29, அக்டோபர் 2026: மேற்காசிய நாடான இஸ்ரேல், 1948ல் நிறுவப்பட்டதில் இருந்து, அங்கு கூட்டணி அரசுகளே அமைந்துள்ளன. கடந்த, 2023ல் ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதல், அதைத் தொடர்ந்து ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள பாலஸ்தீனத்தின் காசாவில் இஸ்ரேல் நடத்திய தொடர் தாக்குதல்கள், மேற்காசியாவில் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

இஸ்ரேல் பார்லிமென்டுக்கு தேர்தல் நடந்தது. மொத்தமுள்ள, 120 இடங்களில், 61 இடங்களைப் பிடிக்கும் கட்சி அல்லது கூட்டணியே ஆட்சி அமைக்க முடியும். 1996ல் இருந்து வெவ்வேறு கால கட்டங்களில் மூன்று முறை, 19 ஆண்டுகள் பிரதமராக இருந்துள்ள பெஞ்சமின் நெதன்யாகு இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவாரா என்ற பெரும் எதிர் பார்ப்பு இருந்தது.

இதுவரை இல்லாத சாதனை அளவாக, 77 சதவீத ஓட்டுகள் பதிவானது. இவற்றை எண்ணும் பணி, நேற்று இரவே துவங்கியது. இதுவரை, 50 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓட்டுகள் எண்ணப்பட்டுள்ளன.

இஸ்ரேலில் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் தேர்தல் நடக்கிறது. கட்சிகள் பெறும் ஓட்டுக்களின் அடிப்படையில், எம்.பி., இடங்கள் ஒதுக்கப்படும். அதன்படி, 61 இடங்களைப் பிடிக்கும் கட்சி அல்லது கூட்டணியே ஆட்சி அமைக்க முடியும்.

ஆளும் கூட்டணி

தற்போதைய பிரதமர் நெதன்யாகுவின் லிகுட் கட்சித் தலைமையிலான கூட்டணி, 53 இடங்களைப் பெறுகிறது. இதில் லிகுட் கட்சி, 26 இடங்களுடன் தனிப்பெரும் கட்சியாக உள்ளது.

ஐக்கிய தோரா ஜூடாயிசம், ஷாஷ், ஓட்ஸ்மா யேகுடிட் கட்சிகள், தலா ஏழு இடங்களிலும், ஜியோனிஸ்ட் கட்சி, ஆறு இடங்களையும் பெறுகின்றன.

முன்னாள் ராணுவத் தளபதியான காடி ஐசன்கோட்டின் யாஷார் கட்சி தலைமையிலான எதிர்க் கட்சிகள் கூட்டணிக்கு, 48 இடங்கள் கிடைக்கும். இதில் யாஷார் கட்சி மட்டும் 21 இடங்களை பிடிக்கிறது. முன்னாள் பிரதமர் நப்தாலி பென்னட் தலைமையிலான பியாக்த் கட்சி, 12, ஜனநாயகக் கட்சி, எட்டு, இஸ்ரேல் பெய்துனு, ஏழு இடங்களையும் பெறுகின்றன.

அரசுக் கட்சி கூட்டணி

பாலஸ்தீனத்தை தனி நாடாகக் கோரும் அரேபியர்கள், நாட்டின் மக்கள் தொகையில், 20 சதவீதம் உள்ளனர். இரண்டு அரபுக் கட்சிகள், கூட்டணி அமைத்துள்ளன. இந்தக் கூட்டணி, 19 இடங்களைப் பிடித்துள்ளது.

தற்போதைய நிலையில், எந்தக் கூட்டணிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால், தனிப்பெரும் கட்சியை ஆட்சி அமைக்க அதிபர் உத்தரவிடலாம். பெரும்பான்மையை நிரூபிக்க அவருக்கு அவகாசம் கொடுக்கப் படும்.

இந்த மூன்று கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும், மற்றொரு கூட்டணிக்கு ஆதரவளிக்கத் தயாராக இல்லை. அதனால், இஸ்ரேலில் மிக விரைவில் மீண்டும் தேர்தல் நடக்கும் சூழ்நிலை உருவாகும். இஸ்ரேலில், 2019 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் மட்டும், கூட்டணி அமையாததால், ஐந்து முறை தேர்தல் நடந்துள்ளது.

# குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவையின் தலைவருமான சி பி ராதாகிருஷ்ணன், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் வெளியுறவுக் குழுவின் தூதுக்குழு பிரதிநிதிகளுடன் சந்திப்பு



சென்னை 29, அக்டோபர் 2026: குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவையின் தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் வெளியுறவுக் குழுவின் தூதுக்குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

திரு டேவிட் மெக் அலிஸ்டர் தலைமையிலான இந்தத் தூதுக் குழுவினருடன் புதுதில்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, கடந்த சில ஆண்டுகளில் இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான உறவுகள் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாகக் குறிப்பிட்ட குடியரசு துணைத் தலைவர், இந்த நல்லுறவை முன்னெடுத்துச் சென்றதற்காக இந்தியா - ஐரோப்பிய யூனியனின் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நட்புறவின் பொதுவான அடித்தளம் குறித்து வலியுறுத்திய அவர், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளாகவும், வெளிப்படையான சந்தைப் பொருளாதாரங்களைக் கொண்டவையாகவும், பன்முகத்தன்மை சமூகங்களைக் கொண்டவையாகவும் திகழும் இந்தியாவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும், ஒரு வலுவான, பன்முனை உலக ஒழுங்கை உருவாக்குவதில் பொதுவான ஆர்வத்தைக் கொண்டுள்ளன என்று குறிப்பிட்டார். ஐரோப்பிய ஆணையத் தலைவர்கள் குழு, அதன் தலைவர் திருமதி உர்சுலா வான் டெர் லேயன் தலைமையில், ஒட்டுமொத்த அரசு நிர்வாக அணுகுமுறையுடன் மேற்கொண்ட பயணத்திற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட நிறுவன ரீதியான பிணைப்புகள், பயனுள்ள முடிவுகளை அளித்துள்ளன என்று அவர் கூறினார்.

ஐரோப்பிய கவுன்சில் தலைவர் மற்றும் ஐரோப்பிய ஆணையத் தலைவர் ஆகியோர் இந்தியக் குடியரசு தின விழாவில் கௌரவ விருந்தினர்களாகப் பங்கேற்றதை அவர் நினைவுகூர்ந்தார். 16-வது இந்தியா-ஐரோப்பிய யூனியன் உச்சிமாநாட்டிற்காக அவர்கள் மேற்கொண்ட அரசுமுறைப் பயணம், இந்த இருதரப்பு உறவிற்கு மிகப் பெரிய உத்வேகத்தை அளித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு குறித்துக் குறிப்பிட்ட குடியரசு துணைத் தலைவர், இந்தியாவும் ஐரோப்பிய யூனியனும் இணைந்து, 25 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சந்தையையும், ஏறக்குறைய இரண்டு பில்லியன் மக்கள் தொகையையும் கொண்டுள்ளன என்று தெரிவித்தார்.

# தீபாவளிக்கு மறுநாள் நவம்பர் 9ம் தேதி அரசு விடுமுறை: தமிழ்நாடு அரசு அறிவிப்பு!



சென்னை 29, அக்டோபர் 2026: 2026 ஆம் ஆண்டு தீபாவளி வரும் நவம்பர் 8ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படும் நிலையில், தீபாவளிக்கு மறுநாள் நவம்பர் 9ஆம் தேதி திங்கட்கிழமை அரசு விடுமுறை தினமாக தமிழ்நாடு அரசு அறிவித்து அரசனை வெளியிட்டுள்ளது.

தீப ஒளி பண்டிகை நவம்பர் மாதம் 8ஆம் தேதி (ஞாயிற்றுக் கிழமை) கொண்டாடப் படுகிறது. இப்பண்டிகையை கொண்டாட மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு குடும்பத்தினருடன் செல்ல திட்டமிட்டுள்ளனர். இதற்கு வசதியாக சிறப்பு, ரயில் உள்ளிட்ட போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த சூழலில், தீபாவளி கொண்டாட சொந்த ஊர்களுக்கு செல்பவர்கள் திரும்புவதற்கு ஏதுவாக, மறுநாள் (நவ.9) திங்கட்கிழமை அன்று ஒரு நாள் மட்டும் பொதுத் துறை நிறுவனங்கள், பள்ளி, கல்லூரிகள், அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை அளிக்கப்படுவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று குடும்பத்தினருடன் பண்டிகையை கொண்டாடிவிட்டு சிரமமின்றி திரும்புவதற்காக இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், நவம்பர் 9ம் தேதி விடுமுறையை ஈடு செய்யும் நவம்பர் 28ம் தேதி பணி நாளாக செயல்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தீபாவளி ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்பட உள்ள நிலையில், சொந்த ஊர்களுக்குச் செல்லும் மக்கள் திங்கள்கிழமையும் விடுமுறையைச் செல விட்டு, தங்களது பணியிடங்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், மக்கள் ஒரே நேரத்தில் திரும்பு வதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் இந்த விடுமுறை உதவும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# ஜனநாயகத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பரஸ்பர மரியாதை தேவை: மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா



சென்னை 29, அக்டோபர் 2026: மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, இன்று, ஜனநாயகத்தில் கருத்து வேறுபாடுகளும் பார்வைக் கோணங்களில் மாறுபாடுகளும் இருப்பது இயல்பானவை என்றும், ஆனால் அத்தகைய கருத்து வேறுபாடுகளை எப்போதும் பரஸ்பர மரியாதையுடனும் கண்ணியத்துடனும் வெளிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கருத்துகள் மாறுபடும் சூழலிலும், பேச்சில் கட்டுப்பாடு, அறநெறி சார்ந்த நடத்தை, பிறருக்கு மரியாதை அளித்தல் ஆகியவற்றின் முக்கியத் துவத்தை, சந்த் கபீரின் போதனைகள் எடுத்துரைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

உத்தரப் பிரதேசத்தின் லக்கிம்பூர் கெரியில் உள்ள கபீர் தாம் ஆசிரமத்தில் நடைபெற்ற 'சந்த் கபீர் பெருவிழா' மற்றும் 'கபீர் ஸ்மிருதி பவனின்' அடிக்கல் நாட்டு விழாவில் உரையாற்றிய திரு பிர்லா, கருணை, சமத்துவம், சமூக நல்லிணக்கம் குறித்த சந்த் கபீரின் காலத்தால் அழியாத போதனைகள், ஆறு நூற்றாண்டுகளுக்குப் பிறகும் கூட இன்றும் சமூகத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றன என்று குறிப்பிட்டார். சந்த் கபீரின் போதனைகளை மேலும் பரவலாகக் கொண்டு செல்வது, மக்களிடையே உணர்திறன், பரஸ்பர புரிதல், சமூக நல்லிணக்கத்தை வளர்க்க உதவும் என்று அவர் தெரிவித்தார். சமூக சீர்திருத்தங்களுக்குச் சந்த் கபீர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை நினைவு கூர்ந்த மக்களவைத் தலைவர், சாதி, மத வேறுபாடுகள், சமூகப் பாரபட்சங்களால் சமூகம் பிளவுபட்டிருந்த அக்காலகட்டத்தில், பழமைவாதக் கருத்துகளை சந்த் கபீர் எதிர்த்ததுடன், பிளவுகளை உண்டாக்கும் தடைகளை உடைத்தெறியவும் பாடுபட்டார் என்று குறிப்பிட்டார்.

# ரஷ்ய டீசல் இறக்குமதி தொடர்பாக வங்கி, துறைமுக அதிகாரிகளுக்கு அமெரிக்க எம்பிக்கள் எச்சரிக்கை: அதிபர் டிரம்ப் வழங்கிய விலக்குக்கு எதிராக நடவடிக்கை



சென்னை 29, அக்டோபர் 2026: உக்ரைன் மீதான போரைத் தொடர்ந்து ரஷ்யாவை பொருளாதார ரீதியாக பணிய வைக்க அந்நாட்டின் எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதித்து 2022ல் அமெரிக்க நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது. தற்போது, அமெரிக்காவில் இடைக்கால தேர்தல் நடக்க உள்ள நிலையில், பெட்ரோல், டீசல் விலை உயர்வால் ஏற்பட்டுள்ள அதிருப்தியை சமாளிக்க அதிபர் டிரம்ப் சமீபத்தில் அமெரிக்கா உட்பட உலகளாவிய சந்தைகளுக்கு டீசல் வழங்க ரஷ்யாவுக்கு அனுமதி அளிக்கும் விலக்கு ஒன்றை வழங்கினார்.

இதற்காக உக்ரைனில் ரஷ்யா போரை நிறுத்திவிட்டதாகவும் அதிபர் டிரம்ப் நாடாளுமன்றத்தில் சான்றளித்தார். இதைத்தொடர்ந்து ரஷ்ய டீசல் ஏற்றுமதிகள் அமெரிக்காவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக வெளியான செய்திகளுக்கு மத்தியில் அமெரிக்காவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளை சேர்ந்த எம்பிக்கள் குழு, வங்கி, துறைமுக அதிகாரிகள் மற்றும் எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்கு கடிதம் எழுதியுள்ளன. அதில், ரஷ்ய டீசலை இறக்குமதி செய்வது சட்ட நடவடிக்கை மற்றும் நாடாளுமன்ற விசாரணைகளுக்கு வழிவகுக்கும் என்றும் அமெரிக்க சட்டத்தை மீறி இறக்குமதிக்கு உதவும் நிறுவனங்கள் குற்றவியல் மற்றும் உரிமையியல் பொறுப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரித்துள்ளனர்.

உக்ரைனில் போர் நிற்காத போது, அங்கு ராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுவிட்டதாக அதிபர் டிரம்ப் சான்றளித்தது எம்பிக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தி உள்ள நிலையில், அவர் அளித்த விலக்கை தடுக்கும் வகையில் எம்பிக்கள் குழு எச்சரிக்கை கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## நடிகர்கள் ராஜ் அய்யப்பா, டெல்னா டேவிஸ் நடிப்பில் இறுதிக்கட்ட படப்பிடிப்பில் இருக்கும் 'லவ் இங்க்' திரைப்படத்தின் வில்லனாக சுனில் ரெட்டி!



சென்னை 29, அக்டோபர் 2026: எம்.ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகும் இளமைத் துள்ளல் நிறைந்த ரொமாண்டிக் காமெடி திரைப்படம் 'லவ் இங்க்'. ஏ. மகேந்திரன் வழங்க, மேகராஜ் தாஸ் இயக்கத்தில் உருவாகி வருகிறது. வரும் டிசம்பர் மாதம் திரைக்கு வரவிருக்கும் இந்தப் படத்தில் ராஜ் அய்யப்பா மற்றும் டெல்னா டேவிஸ் முன்னணி கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இன்றைய இளம் தலைமுறையினரின் காதல், உணர்வுகள் மற்றும் உறவுகளை மையமாகக் கொண்டு, நகைச்சுவை மற்றும் எதிர்பாராத திருப்பங்களுடன் ரசிகர்களை மகிழ்விக்கத் தயாராகி வருகிறது.

இப்படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், நடிகர் சுனில் ரெட்டி தற்போது சென்னையில் நடைபெற்று வரும் இறுதிக் கட்டப் படப்பிடிப்பில் இணைந்துள்ளார்.

இன்றைய தலைமுறையின் சமகால உறவுகளை மையமாகக் கொண்டு உருவாகும் 'லவ் இங்க்', நவீன காதலை ரசிக்கத்தக்க வகையில் நகைச்சுவையுடன் சொல்லும் படமாக அமைவதுடன், அனைத்து வயதினரையும் கவரும் வகையிலும் உருவாகி வருகிறது.

இப்படத்தில் சுனில் ரெட்டி, ஆர்த்தி, ரவி மரியா, மைம் கோபி, பட்டிமன்றம் ராஜா, ரமா, சுபாஷினி, வினோத் முன்னா, கேபிஒய் வினோத், மௌரிஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

சென்னையில் தொடங்கிய இப்படத்தின் படப்பிடிப்பு, பின்னர் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாறு பகுதியில் நடைபெற்றது. தற்போது படக்குழு மீண்டும் சென்னையில் இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகளும் முழுவீச்சில் நடைபெறும். திட்டமிட்டபடி வரும் டிசம்பர் மாதம் படத்தைத் திரைக்கு கொண்டுவர படக் குழுவினர் தீவிரமாகப் பணியாற்றி வருகின்றனர்.

படம் குறித்துப் பேசிய இயக்குநர் மேகராஜ் தாஸ், "இன்றைய ஜென்ஸீ தலைமுறையினருக்கு பிடித்த படமாக 'லவ் இங்க்' நிச்சயம் இருக்கும் என்று நம்புகிறேன். இந்தப் படத்தில் பணியாற்றிய அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டனர். ரசிகர்களுக்கும் படம் நிச்சயம் பிடிக்கும். இளைஞர்களை மட்டுமல்லாமல், குடும்பத்துடன் அமர்ந்து ரசித்து, கொண்டாடக்கூடிய படமாகவும் 'லவ் இங்க்' இருக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது" என்றார்.

மேகராஜ் தாஸ் எழுதி இயக்கியிருக்க, மகேந்திரன் வழங்கும் இப்படத்தை எம்.ஆர். பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்திற்கு தரண் குமார் இசையமைக்கிறார். ஒளிப்பதிவை ஐ. மருதநாயகம் மேற் கொள்ள, கலை இயக்குநராக ராமு தங்கராஜ் பணியாற்றுகிறார். புவன் படத்தொகுப்புப் பணிகளைக் கவனிக்கிறார்.

'லவ் இங்க்' திரைப்படம் வரும் டிசம்பர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

## இசை கலைஞர் பால் டப்பாவின் புதிய மியூசிக் வீடியோ ஆல்பம் 'ஏரோபிளேன்' வெளியீடு



சென்னை 29, அக்டோபர் 2026: ராப் இசை கலைஞர் - பாடகர் - பாடலாசிரியர் - நடிகர் - என பன்முக ஆளுமை திறன் படைத்த பால் டப்பா சுயாதீன இசை உலகில் மிக முன்னணி இசைக் கலைஞராக அசைக்க முடியாத இடத்திற்கு உயர்ந்து வருகிறார். இவருடைய மியூசிக் ஆல்பம் வெளியானவுடன் பெரும் கணக்கிலான டிஜிட்டல் பார்வைகளை பெற்று இணையத்தை அதிர வைத்து வருகிறது. இந்நிலையில் இவர் பாடல் எழுதி, பாடி ,நடித்த 'ஏரோபிளேன்' எனும் புதிய மியூசிக் வீடியோ ஆல்பம் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை திங்க் இன்டி மியூசிக் நிறுவனம் வெளியிட்டிருக்கிறது.

'ஏரோபிளேன்' மியூசிக் வீடியோ ஆல்பத்தில் பால் டப்பா மற்றும் நடிகை அனன்யா ராம் பிரசாத் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். இதனை இயக்குநர் ராகுல் அசோக் குமார் இயக்க, இசையமைப்பாளர் அடியேல் மஸார் ( இசையமைக்க..., பிரகதீஷ் பிரபு ஒளிப்பதிவு செய்திருக்கிறார். இந்த பாடலை இந்திய சுயாதீன இசைக் கலைஞருக்கான திங்க் இன்டி மியூசிக் நிறுவனம் வெளியிடப்பட்டிருக்கிறது.

'காதல் வேணாம்னு சொன்னா காதல் பண்ண சொன்னாயே..' எனத் தொடங்கும் இந்தப் பாடலை பாடலாசிரியர் பால் டப்பா எழுதி, பாடியிருக்கிறார். இந்தப் பாடலில் ஆகாய விமானத்தின் பயணிகளாக பிரேக்கப்பிற்குப் பிறகு காதலர்கள் மீண்டும் சந்திக்கிறார்கள். அவர்களின் காதல்... நினைவலைகளாக இசையுடன் தொடர்ந்து பயணிக்கிறது. இந்த பாடலில் பால் டப்பா மற்றும் அனன்யா ராம் பிரசாத்தின் கெமிஸ்ட்ரி.. இசையுடன் இணைந்து ரசிக்கும் வகையில் உருவாகி இருப்பதால் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

இது ஒரு லவ் பெயிலியர் சாங் என்பதும்.. அதிலும் பிரேக்கப்பிற்குப் பிறகான சந்திப்பு குறித்த பால் டப்பாவின் பாடல் என்பதால்.. இந்தப் பாடல் அனைத்து சிங்கிள் பாய்ஸ்களின் ஸ்டேட்டஸாக மாறி உள்ளது. பாடலாசிரியர் பால் டப்பாவில் வரிகள் அனைத்தும்.. பிரேக்கப் ஆன நண்பர்களுக்கு ஹீலிங் கொடுக்கும் பாடலாக இருப்பதால், இணையவாசிகள் கொண்டாடி வருகிறார்கள்.

## பெரவள்ளூர் பகுதியில் கோவில் உண்டியல் பூட்டை உடைத்து, பணத்தை திருடிய நபர் கைது



சென்னை 29, அக்டோபர் 2026: சென்னை, பெரவள்ளூர், சக்திவேல் நகர் 2வது தெருவில் வசித்து வரும் அருமைநாதன், வ/35, என்பவர் பெரம்பூர், லோகோ ஒர்க்ஸ் சாலையிலுள்ள ஸ்ரீ நாகத்தம்மன் கோவிலில் செயலாளராக உள்ளதாகவும், கடந்த 23.10.2026 அன்று இரவு, மேற்படி கோவிலை பூட்டி விட்டு, மறுநாள் (24.10. 2026) விடியற்காலை கோவிலை திறந்து பார்த்தபோது, கோவிலில் உள்ள உண்டியலின் பூட்டு உடைக்கப்பட்டு உண்டியலில் இருந்த பணம் சுமார் ரூ.5,000/- திருடு போனது தெரியவந்ததாகவும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட நபரை கண்டுபிடித்து கோவில் உண்டியல் பணத்தை மீட்டு தரும்படியும், அருமைநாதன் என்பவர் கே-5 பெரவள்ளூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

கே-5 பெரவள்ளூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டில் ஈடுபட்ட எதிரி அப்பு, வ/25, வேம்பாக்கம் பள்ளம், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை 26.10.2026 அன்று கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி அப்பு மீது ஏற்கனவே கும்மிடி பூண்டி இரயில்வே காவல் நிலையத்தில் 8 திருட்டு வழக்குகள் உட்பட சுமார் 11 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி அப்பு விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (27.10.2026) பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற ளுத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் அரசு அனுமதி பெற்றுத் தருவதாக கூறி பண மோசடி செய்த வழக்கில் பெருங்குடியில் உள்ள சண்முகபிரியா என்பவரது வீட்டில் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் சோதனை




சென்னை 29, அக்டோபர் 2026: தமிழ்நாடு பள்ளி கல்வி துறையில், தனியார் பள்ளி நிர்வாகங்களிடம் அரசு அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வசூலித்து மோசடி செய்ததாக சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களிடம் அளித்த புகாரின் பேரில், சென்னை மத்திய குற்றப்பிரிவில், வழக்குப்பதிவு செய்து இவ்வழக்கில் தொடர்புடைய பி.டி.அரசகுமார், சுரேஷ் மற்றும் ராஜா ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டனர்.

இதனை தொடர்ந்து இவ்வழக்கில் கடந்த 26.10.2026ம் தேதி முன்னாள் அமைச்சர் திரு,அன்பில் மகேஷ் பொய்யாமொழி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வழக்கில் ஏற்கனவே தமிழ்நாடு பள்ளி கல்விதுறை முன்னாள் அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் அவரது உதவியாளர்களான வாலாடி கார்த்திக், அருண் பிரகாஷ், பிரகாஷ் மற்றும் முத்துகுமாரின் உறவினர்களான சரவணன், ரமேஷ், கோகுலகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு செந்தமான வீடுகள், அலுவலங்களில் சோதனை செய்து ஆவணங்கள் மற்றும் மின்னனு சாதனங்கள் கைப்பற்றப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இவ்வழக்கு சம்மந்தமாக நேற்று (28.10. 2026) சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார், சென்னை பெருங்குடியில் உள்ள திருமதி. சண்முகபிரியா என்பவரது வீட்டில் சோதனை மேற்கொண்டு மின்னனு சாதனம் கைப்பற்றியுள்ளார்கள்.

இவ்வழக்கில் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது,

## இந்தியா – கொரியா கடற்படை கூட்டுப் பயிற்சிக்காக ஐஎன்எஸ் சயாத்ரி பூசன் துறைமுகம் சென்றடைந்தது



சென்னை 29, அக்டோபர் 2026: இந்தியா - கொரிய குடியரசு கடற்படை இடையேயான இருதரப்பு பயிற்சியில் பங்கேற்பதற்காக உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட இந்தியக் கடற்படையின் ஏவுகணைக் கப்பலான ஐஎன்எஸ் சயாத்ரி 2026 அக்டோபர் 26 அன்று கொரிய குடியரசின் பூசன் கடற்படைத் துறைமுகத்தை சென்றடைந்தது. இருநாட்டு கடற் படை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மற்றொரு நடவடிக்கையாகவும் இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் இருநாட்டு கடற்படைக்கிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதாகவும் இப்பயணம் அமைந்துள்ளது. பூசன் துறைமுகத்தில் ஐஎன்எஸ் சயாத்ரிக்கு கொரிய குடியரசுக் கடற்படையால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. துறைமுகத்தில் நடைபெறும் பயிற்சியின்போது இருநாட்டு கடற்படை பணியாளர்களின் உரையாடல், இரு நாட்டு கப்பல்களை பார்வையிடுதல், கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகள், விளையாட்டு நிகழ்வுகள் ஆகியவற்றில் கடற்படையின் பங்கேற்கின்றனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்